# நூலகம்

நூலகம் என்னும் சொல்லைக் கேட்டவுடன் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவகையான உணர்வு தோன்றும். நூலகத்தில் நிலவும் அமைதி, நூல்களின் ஒழுங்கான வரிசையமைப்பு, பழைய, புதிய நூல்களின் கலப்படமான மணம், நேரம் கடந்தது தெரியாமல் அங்குள்ள நூல்களைப் படித்துப் பரவசமடைவது என நூலகம் பற்றிப் பலவகையான எண்ணங்கள் மனத்தில் எழும்.

## நூல்களின் தோற்றம்

பழங்காலத்தில் மக்கள் தமது எண்ணங்களையும் செய்திகளையும் வெளிப்படுத்துவதற்குக் கற்பாறைகள், களிமண் பலகைகள், மரப்பட்டைகள், தோல்கள், துணிகள், பனை ஓலைகள் முதலிய பலவகைப் பொருள்களைப் பயன்படுத்தினர். தமிழகத்தைப் பொருத்தமட்டில் ஓலைகளே மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டன. பனை ஓலைகளைப் பதப்படுத்தி எழுதத்தக்க ஓலைச்சுவடிகளாக்கினர். சுவடிகளில் எழுதிய பின்பு, சுவடிகளின் மேலும் கீழும் துண்டுப் பலகைகளை வைத்துக் கட்டினர். அவற்றைப் பெட்டிகளில் பாதுகாப்பாக வைத்ததுடன் பூச்சிகள், கரையான்கள் முதலியன அரிக்காமல் இருப்பதற்குத் துளசி, வேப்பிலை முதலிய பொருள்களையும் இட்டு வைத்தனர். ஓலைச்சுவடிகளை மஞ்சள் நீரில் நனைத்துப் பாதுகாக்கப்படுவதும் உண்டு. உலக இலக்கியத் துறையில் நிகழ்ந்த ஒரு மாபெரும் புரட்சி, காகிதம் கண்டுபிடிக்கப்பட்டது. உலக நாடுகள் அனைத்திலும் கடந்த சில நூற்றாண்டுகளாக எழுதவும் அச்சிடவும் காகிதங்களையே பயன்படுத்தத் தொடங்கினர்.

## நூலகத்தின் பண்டைய நிலை

பண்டைக்காலத்தில் கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. எனவே, மக்களிடையே நூல்களின் புழக்கமும் அரிதாகவே இருந்தது. அரண்மனைகளிலும் மாளிகைகளிலும் மடங்களிலும் கோவில்களிலும் படிக்கும் நோக்கின்றிப் பெருமை சேர்க்கும் நோக்கோடு மட்டுமே நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆனால், பிற்காலத்தில் இந்த நிலை மாறியது. நூல்கள் படிப்பதற்கே என்ற எண்ணம் தழைத்து, அதன் விரிவாக்கமாக நூலகங்கள் உருப்பெற்றன.

## நூலகத் தோற்றம்

கல்வி, மக்களைத் தத்தம் எண்ணங்களையும், அதனால் விளைந்த அறிவையும் பகிர்ந்துகொள்ளத் தூண்டியது. இதுவே புதிய இலக்கியங்களும், இலக்கண நூல்களும் தோன்றக் காரணமாயிற்று. நாடு முன்னேற மக்களைக் கல்வியறிவு பெற்றவர்களாகவும்





Scanned by CamScanner

ஒரு மனிதன் ஆண்டுக்கு 2000 பக்கங்களாவது படித்தால்தான் அன்றாட உலக நடப்புகளை அறிந்த மனிதனாகக் (Informative man) கருதப்படுவான் என யுனெஸ்கோ கூறியுள்ளது.

கிரீஸ் நகர அரசுகளே முதன்முதலாக மக்களுக்கான நூல் நிலையங்களை அமைத்தன.



இந்தியாவில் உள்ள நூலகங்களில் கல்கத்தா தேசிய நூலகம் முதன்மையானது. இதில், பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன.

நற்சிந்தனையாளர்களாகவும் பல்வேறு துறைகளில் வல்லுநர்களாகவும் ஆக்குதல் இன்றியமையாதது. இது மெய்ப்படப் பல்துறை நூல்கள் அடங்கிய பொது நூலகங்கள் நாடு முழுவதிலும் திறக்கப்படவேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்றது. நூல் ஒன்று தனி ஒருவரிடம் இருந்தால், அதன் பயன் பிறருக்குக் கிடைக்காது. ஆனால், அதே நூல், பொதுநூலகத்தில் வைக்கப்பட்டால், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்ததைப் போன்று அது பலர்க்கும் பயன்படும். அதனால் இந்தியா உள்பட, உலகநாடுகள் அனைத்திலும் மக்களுக்கான பொதுநூலகங்கள் திறக்கப்பட்டன.

### நூலகத்தின் பல்வேறு பெயர்கள்

புத்தகச்சாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசகசாலை, படிப்பகம், நூல்நிலையம், பண்டாரம் என நூலகம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நூலகம் என்னும் தமிழ்ச்சொல்லுக்கு இணையாக ஆங்கிலத்தில் 'லைப்ரரி' என்னும் சொல் வழங்குகிறது. இலத்தீன் மொழியில் 'லிப்ரா' என்னும் சொல்லிற்குப் புத்தகம் என்பது பெயர்.

### நூலகமும் பொதுநூலகத் துறையும்

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது பழமொழி. அவ்வண்ணமே நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ் என்னும் புதுமொழியும் உண்மையை விளம்புகிறது என்பதனை அறிஞர் ஏற்றுக்கொள்வர். ஓர் அரசின் தலையாய கடமை மக்களை அறிவுடையோர் ஆக்குதலே. அதற்கிணங்க, ஊர்தோறும் நூலகம் அமைத்தல்வேண்டும் என்பதனை முதன்மைக் குறிக்கோளாகக்கொண்டு பொது நூலகத்துறை செயல்படுகிறது. அவ்வப்பகுதியில் வாழும் மக்கள் தொகைக்கு ஏற்பப் பலநிலைகளில் பொது நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் தனியாள் அல்லது நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள நூலகங்களை அவற்றுக்கு உரியோர் மட்டுமே பயன்படுத்த இயலும்; பொதுமக்கள் பயன்படுத்த இயலாது. ஆனால், சமுதாயத்தின் எந்நிலையைச் சார்ந்தவராயினும் சிறியோர் முதல் பெரியோர்வரை வயது வேறுபாடின்றி உறுப்பினராகவும், அங்கிருந்து நூல்களை எடுத்துப் படிக்கவும் பொதுநூலகங்கள் வழிவகுத்துள்ளன. இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழக அரசுதான் 1948ஆம் ஆண்டு சென்னைப் பொதுநூலகச் சட்டத்தை இயற்றி, நூலகப் பணிகளின் சீரான செயல்பாட்டிற்கு வித்திட்டது.



Scanned by CamScanner

### பள்ளியும் நூலகமும்

பள்ளி என்பது பாடநூல்களைக்கொண்டு அறிவை விதைக்கும் களம். ஆனால், நூலகமோ அந்த அறிவை வளர்த்துச் செழுமைப்படுத்தும் மற்றொரு களமாகும். பள்ளியும் நூலகமும் இணைபிரியாதவை. இதனால்தான், அனைத்துப் பள்ளிகளிலும் நூலகம் இடம்பெற்றுள்ளது. பள்ளியில் மாணவர்கள் ஓரிடம், நூலகம் வேறிடம் என்ற நிலையை மாற்ற, நம் பள்ளிக்கல்வித் துறை "புத்தகப்பூங்கொத்து" என்னும் வகுப்பறை நூலகத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. வகுப்பறை நூலகத்தில் மாணவர்களின் வயதிற்கும், மனநிலைக்கும் ஏற்ப அறிவுசார் நூல்கள் இடம்பெற்றுள்ளன.




பாபிலோனியாவில் உள்ள நிப்பூர் என்ற ஊரில் கி.மு.2000 ஆண்டிற்கு முந்தைய சுமார் 2500 களிமண் பலகைகளில் எழுதப்பட்டிருந்த நூல்களின் தொகுப்பு கண்டெடுக்கப்பட்டது.

### நூலகமும் பயன்பாடும்

மாணவப் பருவம் கற்றலுக்கு ஏற்றது. இப்பருவத்தில் பலவகைத் துறைகள்பற்றி அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதற்குப் பெரிதும் துணைநிற்பது நூலகமே. நூலகத்தில் இலக்கியம், இலக்கணம், திறனாய்வு, தத்துவம், அறிவியல், கணிதம், வரலாறு, பொருளியல், வாணிகம், மருத்துவம், கலை, மொழிபெயர்ப்பு, பொது அறிவு முதலிய பல்வகைத் தலைப்புகளிலான நூல்கள் இடம்பெற்றிருக்கும். செய்தித்தாள்கள், வார மாத இதழ்கள், சிற்றிதழ்கள், சிறப்பிதழ்கள், வேலைவாய்ப்புச் செய்தி இதழ்கள் போன்றனவும் காணப்படும்.

மாணவர் ஒவ்வொருவரும் நூலகங்களுக்குச் சென்று அங்குக் கிடைக்கும் அறிவுச் செல்வத்தினைத் தவிராமல் பெறுதல் வேண்டும். உள்ளூர்ச் செய்திகள் முதல் உலகச் செய்திகள்

நூலகப் பயன்பாட்டிற்கான விதிகளை உருவாக்கித் தந்த சீர்காழி சீ. இரா. அரங்கநாதன், இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படுகிறார்.



கன்னிமாரா நூலகம்

தமிழகத்திலுள்ள மிகப் பழைமையான நூலகங்கள்.

சரசுவதி மகால் நூலகம், தஞ்சை. (1820)

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.

கன்னிமாரா நூலகம், சென்னை. (1869),

சென்னைப் பல்கலைக்கழக நூலகம் (1907),

அண்ணாமலை பல்கலைக்கழக நூலகம், சிதம்பரம் (1929),

டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை (1947),

மறைமலை அடிகளார் நூலகம், சென்னை (1958),

மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகம் (1966),

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன நூலகம், சென்னை (1970),

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் (1981)



Scanned by CamScanner

வரை பல்வேறு பொது அறிவுச் செய்திகளையும் பெற்றுப் பயனடைய வாய்ப்பு நல்குவது நூலகமே. மாணவர்களாயினும் மற்றோராயினும் அனைவரது அறிவுப்பசியையும் போக்கும் சிறப்பான இடம் நூலகமாகும்.

மின்னணுக் காலமான தற்காலத்தில் நூலகங்களில் உள்ள நூல்கள் மின்னணு மயமாக்கப்பட்டு வருகின்றன. இணையத்தள நூலகம், குறுவட்டுகள், மின்னணு ஒளிவட்டு, நுண்சுருள் முதலிய வேறுசில வடிவங்களிலும் நூல்கள் உருமாற்றம் பெற்று, நூலகப் பயன்பாட்டில் உள்ளன.

### நூலகத்தினால் விளையும் நன்மைகள்

பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களும் அதிக விலையுள்ள நூல்களைச் செலவின்றிப் படித்துப் பயன் பெறலாம். எத்துறை சார்ந்த நூலையும் அச்சில் இல்லாத பல அரிய புத்தகங்களையும் படிக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. பலதுறை நூல்களையும் ஒரே இடத்திலும் வீட்டிற்கு எடுத்துச் சென்று படிக்கும் வசதியும் உள்ளது. வீட்டிலிருந்தபடியே நூல்களைப் படிக்க வகைசெய்யும் மின்னணு நூலகங்களும் உள்ளன.

### நூலகமும் நாமும்

நூலகத்தில் உள்ள நூல்களைக் கிழியாமலும், சிதைவுறாமலும் பாதுகாத்தல் நமது கடமையாகும். அஃது அடுத்தவருக்குப் பயன்பட ஏதுவாக இருக்கும். வாழ்வில் வெற்றிபெற நூலகங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவோம். அறிவு வளரவும் ஆற்றல் மிளிரவும் நூல்களைப் படிப்போம். நூல்களைப் பேணிக் காக்கும் நூலகங்களைப் போற்றிக் காப்போம்.

## மாதிரி வினா

### நெடுவினா

தமிழகத்தில் நூலகத் துறையின் வளர்ச்சிபற்றிக் கட்டுரை வரைக.

### செயல்திட்டம்

உன் பள்ளி நூலகப் பயன்பாடு குறித்து ஒரு கட்டுரை வரைக.

உன் வகுப்பு மாணவருடன் ஒருங்கிணைந்து கையெழுத்து இதழ் உருவாக்குக.



Scanned by CamScanner

விரிவானம்

இயல் ஒன்று

# நூலகம் நோக்கி...

JWZN1E

நுழையும்முன்

"கற்றது கையளவு, கல்லாதது உலகளவு" என்பர். உலக அறிவை நாம் பெறுவதற்குப் பாடநூல்கள் மட்டும் போதாது. பல்வேறு துறை சார்ந்த நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும். அதற்குத் துணைபுரிவன நூலகங்களே ஆகும். நூலகங்கள் மாவட்ட நூலகம், கிளை நூலகம் , ஊர்ப்புற நூலகம் , பகுதி நேர நூலகம், தனியாள் நூலகம் எனப் பலவகைப்படும். ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம் நம் தமிழ்நாட்டில் உள்ளது. அதைப்பற்றி அறிந்து கொள்வோம்.



[ஆறாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் ஒரு நாள் களப்பயணமாகச் சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு வருகின்றனர்.]

ஆசிரியர் : மாணவர்களே! இதோ, இது தான் அண்ணா நூற்றாண்டு நூலகம்.

மாணவர்கள் : ஆ! எவ்வளவு பெரிய நூலகம்!

ஆசிரியர் : ஆம், ஆசியக்கண்டத்திலேயே இரண்டாவது பெரிய நூலகம் இதுதான். தரைத் தளம் மற்றும் எட்டு அடுக்குகளைக் கொண்டது. இதன் பரப்பளவு மட்டும் எட்டு ஏக்கர். சரி! சரி! வாருங்கள். உள்ளே சென்று பார்க்கலாம்.



6th_Tamil_Page_1_74.indd 11 11-07-2018 18:57:52

Scanned by CamScanner

[அனுமதிக் கடிதத்தை ஆசிரியர் வரவேற்பாளரிடம் கொடுக்கிறார். பிறகு நூலகப் பொறுப்பாளர் ஒருவர் நூலகத்தைச் சுற்றிக் காட்டுகிறார். அங்குச் சுவரில் ஒரு படம் மாட்டப்பட்டு உள்ளது.]

**தெரிந்து தெளிவோம்**

ஆசியா கண்டத்திலேயே மிகப் பெரிய நூலகம் **சீனா**வில் உள்ளது.

கவிதா : ஐயா, இந்தப் படத்தில் இருப்பவர் யார்?



நூலகர் : இவர்தான் முனைவர் **இரா. அரங்கநாதன்.** நூலக விதிகளை உருவாக்கியவர். இவர் **இந்திய நூலக அறிவியலின் தந்தை** என்று அழைக்கப்படுகிறார்.



பிரெய்லி நூல்

மாணவர்களே! தரைத் தளத்தில் பார்வைத் திறன் குறைபாடு உடையோருக்கான பிரிவு உள்ளது. அவர்கள் தொட்டுப் பார்த்துப் படிப்பதற்கான **பிரெய்லி** நூல்கள் உள்ளன. கேட்டு அறிய ஒலி வடிவ நூல்கள் குறுந்தகடுகள் வடிவில் உள்ளன. அவர்களுக்கு உதவி செய்யப் பணியாளர்களும் உள்ளனர். இங்கு பிரெய்லி எழுத்தில் நூல்களை உருவாக்கும் கருவியும் உள்ளது. படியெடுக்கும் வசதியும் உண்டு.

கணியன் : என் பக்கத்து வீட்டு அண்ணாவிற்குப் பார்வைக் குறைபாடு இருந்தும் பட்டப்படிப்பு முடித்துள்ளார். அவருக்கு இது மிகவும் பயன்படும். அவரிடம் இந்தத் தகவலைக் கூறப் போகிறேன்.

நூலகர் : இதோ **நகரும் படிக்கட்டு**. இதில் ஏறி நாம் முதல் தளத்திற்குச் சொல்வோம் வாருங்கள். இந்த முதல் தளம் குழந்தைகளுக்காகச் சிறப்பாக உருவாக்கப் பட்ட பகுதி. குழந்தைகள் மகிழ்ச்சியான சூழலில் படிப்பதற்காகச் செயற்கை மரம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது.





6th_Tamil_Page_1_74.indd 12 11-07-2018 18:57:53

Scanned by CamScanner



சிறுவர்கள் மட்டுமல்ல அனைவரின் மனத்தையும் கொள்ளைகொள்ளும் பகுதி இது. இங்கு இருபது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்லூடகக் குறுந்தகடுகள் குழந்தைகளுக்காகச் சேகரித்து வைக்கப்பட்டு உள்ளன. பிற நாடுகளில் இருந்து திரட்டப்பட்ட ஐம்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இங்கு உள்ளன.

(குழந்தைகள் பிரிவில் அமைக்கப்பட்டிருந்த நூல் அடுக்குகளையும் விளையாடும் இடத்தையும் மாணவர்கள் பார்த்து மகிழ்ந்தனர். அங்குக் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இருந்த புத்தகங்களை ஆவலுடன் கையில் எடுத்து மகிழ்ச்சியுடன் பார்த்தனர். அப்பிரிவை விட்டுப் பிரிய மனமில்லாமல் மாணவர்கள் நகர்ந்தனர்.)

இனியா : இந்த ஒரு தளத்தைப் பார்க்கவே இன்று ஒரு நாள் போதாது போலிருக்கிறதே!.

கவிதா : ஆம் இனியா, நீ கூறுவது சரிதான்.

(ஒவ்வொரு தளமாகப் பார்த்தபடி சென்று ஏழாம் தளத்தை அடைகின்றனர்.)

நூலகர் : இதுதான் ஏழாம் தளம். இங்குப் பழைமையான ஓலைச் சுவடிகள் சேகரித்துப் பாதுகாத்து வைக்கப்பட்டு உள்ளன. இதே தளத்தில் வரலாறு, புவியியல், சுற்றுலா நூல்களும் உள்ளன.

இங்கு அனைத்துவகைப் போட்டித் தேர்வுகளுக்கும் தேவையான நூல்கள் உள்ளன. மின் நூலகமும் உள்ளது. அனைத்துத் துறை சார்ந்த தரமான மின்நூல்களும் மின் இதழ்களும் உள்ளன.

**தெரிந்து தெளிவோம்** — **அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் எட்டுத் தளங்கள்**

- தரைத்தளம் - சொந்த நூல் படிப்பகம், பிரெய்லி நூல்கள்
- முதல் தளம் - குழந்தைகள் பிரிவு, பருவ இதழ்கள்
- இரண்டாம் தளம் - தமிழ் நூல்கள்
- மூன்றாம் தளம் - கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள்
- நான்காம் தளம் - பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி
- ஐந்தாம் தளம் - கணிதம், அறிவியல், மருத்துவம்
- ஆறாம் தளம் - பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை
- ஏழாம் தளம் - வரலாறு, சுற்றுலா
- எட்டாம் தளம் - நூலகத்தின் நிர்வாகப் பிரிவு



Scanned by CamScanner

மாதவி : ஐயா, இங்குள்ள புத்தகங்களை நாம் வீட்டிற்கு எடுத்துச் செல்ல முடியுமா?

ஆசிரியர் : முடியாது மாதவி. இங்கேயே அமர்ந்துதான் படிக்க வேண்டும்.

> **தெரிந்து தெளிவோம்**
>
> **நூலகத்தில் படித்து உயர்நிலை அடைந்தவர்களுள் சிலர்**
>
> அறிஞர் அண்ணா, ஜவஹர்லால் நேரு
> அண்ணல் அம்பேத்கர், காரல் மார்க்ஸ்

பாத்திமா : இந்த நூலகத்தில் எங்கும் 'குளு குளு' வென உள்ளதே!

நூலகர் : ஆமாம். நூலகம் முழுவதுமே குளிர்பதன வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இதே வசதியுடன் கூட்ட அரங்கு, கலையரங்கு, கருத்தரங்கக் கூடம், கண்காட்சி அரங்கு போன்றவையும் உள்ளன.

பீட்டர் : ஆகா, இத்தனை வசதிகள் நூலகத்தில் உள்ளனவா? நன்றி ஐயா. எங்கள் ஊரில் நூலகம் இல்லையே? நான் என்ன செய்வது?

ஆசிரியர் : அதற்குத்தான் தமிழக அரசு நடமாடும் நூலகம் என்னும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

பீட்டர் : அப்படியானால் அதை நான் பயன்படுத்துவேன் ஐயா.

மாணவர்கள் : இனி எங்கள் வீட்டின் அருகிலுள்ள கிளை நூலகத்தையும் தவறாமல் பயன்படுத்துவோம் ஐயா.

ஆசிரியர் : எங்களுக்கு இனிய முறையில் வழிகாட்டியாக இருந்த நூலகப் பொறுப்பாளர்களுக்கு மிக்க நன்றி. மாணவர்களே மகிழ்ச்சிதானே! வாருங்கள் புறப்படலாம்.

> **தெரிந்து தெளிவோம்**
>
> சிறந்த நூலகர்களுக்கு டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது வழங்கப்படுகிறது.

## கற்பவை கற்றபின்

1. நூலகங்களில் உள்ள புத்தகங்களில் உங்களுக்குப் பிடித்தமான நூல்களைப் பட்டியலிடுக.
2. நீங்கள் விரும்பிப் படித்த நூல் குறித்து நண்பனுடன் உரையாடுக.

JX9J32

## மதிப்பீடு

அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.



6th_Tamil_Page_1_74.indd 14 11-07-2018 18:57:53

Scanned by CamScanner

விரிவானம்

இயல் மூன்று

# தமிழ் ஒளிர் இடங்கள்


JGX9QH

நுழையும்முன்

மனிதர்கள் புதிய புதிய இடங்களைக் காண்பதில் விருப்பம் உடையவர்கள். பழமையான நினைவுச் சின்னங்கள், இயற்கை அழகு நிறைந்த பகுதிகள், வழிபாட்டு இடங்கள், கடற்கரைப் பகுதிகள், தேசியப் பூங்காக்கள் போன்ற இடங்களைக் காண்பது உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தரும். அவற்றுள் தமிழின் பெருமையை விளக்கும் இடங்கள் சிலவற்றை அறிவோம்.

அன்பு மாணவர்களே! புத்தகங்களில் பல வகை உண்டு. கதைப் புத்தகங்கள், கட்டுரைப் புத்தகங்கள், கவிதைப் புத்தகங்கள் ஆகியவை நீங்கள் அறிந்தவையே. இது தமிழுடன் தொடர்புடைய இடங்கள் குறித்த கையேடு. இக்கையேடு அத்தகைய இடங்களை நேரில் காண வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## தஞ்சை சரசுவதி மகால் நூலகம்





இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் ஒன்று. இந்நூலகம் கி.பி. (பொ.ஆ.) 1122 முதல் இயங்கி வருவதாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. இங்குத் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச் சுவடிகளும் கையெழுத்துப் படிகளும் உள்ளன. தலைசிறந்த ஓவியங்களும் தொன்மையான இசைக் கருவிகளும் சிற்பங்களும் இங்கு இடம்பெற்றுள்ளன.



7th Std Tamil Term 2.indd 59 15-05-2019 15:03:15

Scanned by CamScanner

## தமிழ்ப் பல்கலைக்கழகம் – தஞ்சாவூர்



செம்மொழியாகிய தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தமிழக அரசால் கி.பி. (பொ.ஆ.) 1981 இல் தோற்றுவிக்கப்பட்டது தமிழ்ப்பல்கலைக்கழகம். இது தஞ்சாவூரில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. வானத்தில் இருந்து பார்க்கும் பொழுது "தமிழ்நாடு" எனத் தெரியும் வகையில் இதன் கட்டட அமைப்பு உள்ளது. இந்திய நாகரிகத்தின் பண்பாட்டுக் கூறுகள் அனைத்தையும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராய வேண்டும் என்பதே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கம்.

இங்குக் கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் ஆகிய ஐந்து புலங்களும் இருபத்தைந்து துறைகளும் உள்ளன. இப்பல்கலைக்கழகம் தமிழ்மொழி ஆய்வுகள் செய்வது மட்டுமன்றி, சித்த மருத்துவத்துறை மூலம் பொதுமக்களுக்குப் பயனுள்ள வகையில் மருத்துவத் தொண்டு செய்து வருகிறது. இந்திய ஆட்சிப்பணி பயிற்சியாளர்களுக்குத் தமிழ்மொழிப்பயிற்சியை இப்பல்கலைக்கழகமே வழங்குகிறது. இங்கு மிகப்பெரிய நூலகம் ஒன்று அமைந்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் இங்குக் கல்வி கற்று வருகின்றனர்.

## உ.வே.சா நூலகம் – சென்னை

கி.பி. (பொ.ஆ.) 1942 இல் தொடங்கப்பட்ட இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு, வடமொழி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன. இங்கு 2128 ஓலைச்சுவடிகளும் 2941 தமிழ் நூல்களும் உள்ளன.

## கீழ்த்திசை நூலகம் – சென்னை

இந்நூலகம் கி.பி. (பொ.ஆ.) 1869ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச்சுவடிகள் உள்ளன. கணிதம், வானியல், மருத்துவம், வரலாறு உள்ளிட்ட பல்வேறு துறை நூல்களும் இடம்பெற்றுள்ளன. இது தற்போது அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஏழாம் தளத்தில் இயங்கி வருகின்றது.



7th Std Tamil Term 2.indd 60 15-05-2019 15:03:15

Scanned by CamScanner

## கன்னிமாரா நூலகம் – சென்னை

கி.பி. (பொ.ஆ.) 1896 இல் தொடங்கப்பட்ட கன்னிமாரா நூலகம் தமிழ்நாட்டின் மைய நூலகம் ஆகும். இஃது இந்திய நாட்டின் களஞ்சிய நூலகங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. இந்நூலகத்தில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு பிரதி இங்குப் பாதுகாக்கப்படுகிறது. இந்நூலகத்தின் மூன்றாம் தளத்தில் மறைமலை அடிகள் நூலகமும் செயல்பட்டு வருகின்றது.



Scanned by CamScanner

## தெரிந்து தெளிவோம்

### புகழுக்குரிய நூலகம்

ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்குப் பாதுகாக்கப்படுகின்றன.

உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமாரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.

இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது, திருவனந்தபுரம் நடுவண் நூலகம்.

கொல்கத்தாவில் 1836ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1953இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப் பெரிய நூலகமாகும். இது ஆவணக் காப்பக நூலகமாகவும் திகழ்கிறது.

உலகின் மிகப் பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவிலுள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ்.

## கற்பவை கற்றபின்...

1. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்படவேண்டும்! - அறிஞர் அண்ணா

   உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே! - கதே

   இவை போன்ற பொன்மொழிகளை எழுதி வகுப்பறையில் படித்துக் காட்டுக.

   KC9H13

2. சீர்காழி இரா. அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் ஒன்பதாம் நாள், தேசிய நூலக நாளாகக் கொண்டாடப்படுவதன் காரணத்தை அறிக.

3. நூலகத்தில் கவிதை, கதை முதலிய நூல்களை நூலாசிரியர் வரிசையிலும் நூலின் அடையாளக் குறியீட்டு எண் அடிப்படையிலும் எவ்வாறு தேடுவது என்பதைத் தெரிந்துகொள்க.

Scanned by CamScanner